வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 28.05.2025 புதன்கிழமை இதழ் : 148 பக்கங்கள் : 12

# வடக்கின் காணி தொடர்பான வர்த்தமானி மீளப்பெறப்பட்டது

கொழும்பு, மே 28

**யாழ்ப்பாணம் உட்பட வடக்கின் 4 மாவட்டங்களில் காணிகளை அரசுடைமையாக்கும் நோக்கில் அறிவித்து, கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிட்ட வர்த்தமானியை அரசாங்கம் நேற்று மீளப்பெற்றது.**

வடக்கு மாகாணத்தில் வவுனியா தவிர்ந்த 4 மாவட்டங்களில் சுமார் 5 ஆயிரத்து 900 ஏக்கர் காணிகளை எவரும் உரிமை கோராதுவிடின் அவை அரச காணிகளாக அறிவிக்கப்படும் என்று காணி நிர்ணய கட்டளை சட்டம் 4ஆம் பிரிவின் கீழ் கடந்த 2025 மார்ச் 28 ஆம் திகதி 2430 இலக்க மிடப்பட்ட வர்த்தமானி வெளியானது.

இந்த வர்த்தமானிக்கு தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன், அதனை உடன் மீளப்பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இது தொடர்பில், கடந்த 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதமர் ஹரிணி அமர சூரிய கலந்துரையாடியிருந்தார். இதன்போதும், வர்த்தமானியை மீளப் பெறவேண்டும் என்று தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர். இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி, அமைச்சரவை மட்டத்தில் பேசி பதிலளிப்பதாகக் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் வர்த்தமானி மீளப்பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வர்த்தமானி மீளப்பெறும் முடிவை வரவேற்கிறோம்

### சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 28

"காணி அபகரிப்பு வர்த்தமானிக்கு எதிராக காலக்கெடு விதித்து நாம் வெகுஜன போராட்டங்கள், சட்ட மறுப்பு போராட்டங்களில் மக்களை வழிநடத்த முயன்ற போது, காலக்கெடு முடியும் சமயத்தில் காணி அபகரிப்பு வர்த்தமானியை கைவாங்கும் தீர்மானத்தை அரசு எடுத்திருப்பதை வரவேற்கிறோம்." என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் சுமார் 5 ஆயிரத்து 900 ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை அரசாங்கம் நேற்று மீளப்பெற்றது. இதைத் தொடர்ந்து, சுமந்திரன் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "காணி நிர்ணய சட்டத்தின் கீழ் 2025 மார்ச் 28 அன்று தயாரிக்கப்பட்ட வர்த்தமானி பிரசுரத்தை மீளக் கைவாங்குவதாக அரசு

11

## வர்த்தமானியை அரசாங்கம் மீளப்பெற்றது பெரும் வெற்றி!

### கஜேந்திரகுமார் எம். பி.

யாழ்ப்பாணம், மே 28

"காணி சுவீகரிப்பு வர்த்தமானியை அரசாங்கம் மீளப்பெற்றமை மிகப்பெரிய வெற்றியாகும்", என்று தமிழ்த் தேசிய பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "காணி சுவீகரிப்பு வர்த்தமானி விடயத்தை பாராளுமன்றுக்கு கொண்டு சென்று

11

வர்த்தமானி மீளப்பெறப்பட்டமை

## "தமிழ், முஸ்லிம்களின் இணைந்த போராட்டத்துக்கான வெற்றி"

கொழும்பு, மே 28

காணி சுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் மீளப்பெற்றிருப்பது தமிழ், முஸ்லிம் எம். பி.க்களின் ஒன்றிணைந்த போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகவே கருதுகிறோம் - இவ்வாறு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் எம். பி. தெரிவித்துள்ளார்.

காணி சுவீகரிப்பு வர்த்தமானி அறிவித்தலின் பாரதூர தன்மைகள் மற்றும் அதனால் ஏற்படவுள்ள பாதக விளைவுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும்

11

## எமது வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் தும்புத்தடி!

### கஜேந்திரகுமார் எம். பி.

யாழ்ப்பாணம், மே 28

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக "நாம் ஒரு தும்புத்தடியை நிறுத்த நினைக்கிறோம்" என்று, தமிழ்த் தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை பணிமனையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அந்த சந்திப்பில் செய்தியாளர்கள் மாகாண சபை தேர்தல் குறித்து

11

## போதைக்கு அடிமையான பெண்ணுக்கு புனர்வாழ்வு

### மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், மே 28

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான - போதைக்கு அடிமையான 26 வயது பெண்ணை ஆறு மாதங்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் 340 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 26 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அவர் போதைப்பொருளை பயன்படுத்தியிருந்தமை தெரியவந்தது.

11

## 5மாதங்களில் 1,062 பேர் விபத்துகளில் மரணம்!

கொழும்பு, மே 28

நாட்டில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் ஆயிரத்து 62 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மே 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டில் ஆயிரத்து மூன்று விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஆயிரத்து 62 பேர் உயிரிழந்தனர். அத்துடன், சுமார் 7 ஆயிரம் பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் அவர் கூறினார்.

இதேசமயம், நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் வீதி விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## 40 முன்னாள் எம். பி.களை கைது செய்ய அரசு திட்டம்

### விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, மே 28

"என்னையும் சேர்த்து, 40 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களை கைதுசெய்யும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது", என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

"கைது செய்யப்படவேண்டிய 40 அரசியல்வாதிகளின் பெயர், விவரங்களை இலஞ்சம், ஊழல் ஒழிப்பு தொடர்பான ஆணைக்குழுவிடம் ஜனாதிபதி செயலகம் கையளித்துள்ளது. அந்தப்

11

## சத்திரசிகிச்சைக்கு உட்பட்ட இளம் குடும்ப பெண் மரணம்

யாழ்ப்பாணம், மே 28

பித்தப்பை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க் கிழமை உயிரிழந்தார்.

நல்லூரைச் சேர்ந்த துஷ்யந்தன் நிரோஷா (வயது 37) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண், பித்தப்பை கல் சத்திர சிகிச்சைக்காக கடந்த 22ஆம் திகதி தெல்லிப்பழை

11

## இலங்கை - சீனா இடையே ஒப்பந்தங்களுக்கு அனுமதி

கொழும்பு, மே 28

இலங்கை - சீனா இடையே மென்மையான இரு தரப்பு வர்த்தக மேம்படுத்தலுக்கான செயல்பாட்டு குழுவை நிறுவுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிறுவப்படும் வர்த்தக மேம்படுத்தல் செயல்பாட்டு குழு மூலம் இரு தரப்பு வர்த்தகத்தில்

11

## ரூ. 15.3 கோடி சொத்து குவிப்பு; மேர்வின்மீது குற்றப்பத்திரிகை

கொழும்பு, மே 28

மக்கள் தொடர்பு அமைச்சராக பதவி வகித்த காலத்தில் 15.3 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துகள் மற்றும் பணத்தை சேர்த்தார் என்று கூறி மேர்வின் சில்வாவுக்கு எதிராக லஞ்சம், ஊழல் ஒழிப்பு தொடர் பான ஆணைக்குழு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

கொழும்பு - 7 பகுதியில் 7 கோடி ரூபாய் பெறுமதியான நிலம் வாங்கியமை, கடவத்தை தலுப்பிட்டியில் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து வாங்கியமை, அவரின் மகன் மாலக சில்வாவுக்கு பல கோடி ரூபாய் செல வில் சொகுசு வாகனங்கள் வாங்கியமை உட்பட பல குற்றச்சாட்டுகள் லஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் மேர்வின் சில்வாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன. (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாநகர சபை உட்பட சில சபைகளில் எமது ஆட்சியே

## தேசிய மக்கள் சக்தி சொல்கிறது

வவுனியா, மே 28

வவுனியா மாநகர சபை உட்பட வன்னியின் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கு சாதகமான நிலைமை உள்ளது என்று அந்தக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



வவுனியாவில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் முறைமையானது பல்வேறு பிரச்னைக்கு உட்பட்டதாக இருக்கிறது. நாம் ஏனைய கட்சிகளுடனும் சுயேச்சை உறுப்பினர்களுடனும் பேச்சு நடத்தி வருகிறோம். தனிப்பட்ட ரீதியாகவும் உறுப்பினர்களுடன் பேசியுள்ளோம்.

வவுனியாவில் சிங்கள பிரதேச சபை, வவுனியா மாநகர சபை, தெற்கு தமிழ் பிரதேச சபை, மன்னாரில் முசலி, நானாட்டான் ஆகிய சபைகளில் நாம் ஆட்சி அமைப்பதற்கு சாதகமான நிலைமைகள் காணப்படுகின்றன.

எமது கொள்கைகளை ஏற்று செயல்படுபவர்களுக்கு திறந்த மனதுடன் அழைப்பு விடுக்கிறோம். எமது கொள்கைகள், சிந்தனைகள் கட்சியின் விழுமியங்களுக்கு ஏற்றவகையில் ஆட்சி அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் நிச்சயமாக அவர்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்க நாங்கள் காத்திருக்கின்றோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாகப் பல்வேறுபட்ட செயல்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கிறது.

எமது வெற்றிக்கு ஊடகவியலாளர்களும் உதவியுள்ளனர். அதற்கு எமது நன்றிகளை கூறிக்கொள்கின்றோம். நியாயமான ஊடகவியலாளர்கள் இங்கு உள்ளனர். அவர்களின் சேவைக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். ஆனால், ஒரு சில ஊடகவியலாளர்கள் இலாப நோக்குடன் மக்களை குழப்பும் விதமான பல்வேறு செய்திகளை பரப்புகின்றனர். அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கியே நாம் பாராளுமன்றில் குரல் எழுப்பி வருகின்றோம். இன, மத, மொழி பேதத்துக்கு எமது அரசில் இடமில்லை. வவுனியாவில் மூன்று இன மக்களும் இருக்கின்றனர். அவர்களிடம் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. அவை தொடர்பான தீர்வு பெறுவதற்காக பாராளுமன்றுக்கு அவற்றைத் தெரியப்படுத்துகிறோம். அவற்றையும் ஊடகங்களில் பிரசுரித்து உங்கள் நடுநிலை தன்மையை பேணுமாறு அன்பாக கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (ஐ-10)



# நல்லூர் கந்தன் திருவிழா விஞ்ஞாபனம் கையளிப்பு!

யாழ்ப்பாணம், மே 28

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந் திருவிழா எதிர்வரும் ஜூலை 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நல்லூர் கந்தன் பெருந்திருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி நேற்றைய தினம் பெருந்திருவிழா விஞ்ஞாபனம் அடங்கிய காளாஞ்சி ஆலய கணக்குப்பிள்ளையால் கையளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகர சபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரங்கள் அமைப்பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தெல்லிப்பழை மருத்துவமனை வளாகத்தில் சுகாதார சீர்கேடு!

யாழ்ப்பாணம், மே 28

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நோயாளிகளுக்கான வசதிகளில் ஒழுங்கீனம் நிலவுகிறது. அத்துடன், மருத்துவமனை சுற்றாடலில் துய்மை பேணப்படுவதில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நோயாளர் அனுமதி வழங்கப்படும் இடத்தில் போதிய ஊழியர்கள் கடமையில் இருப்பதில்லை, பெண் நோயாளருக்கான விடுதியில் ஆண் துப்புரவு தொழிலாளர்களே ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்களுக்கு பொதுவான சீருடை வழங்கப்படாமல் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் பணியாளர்கள் யார் பொது மக்கள் யார் என்பது கூட தெரியாமல் உள்ளது என்றும் நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மருத்துவமனை மலசலகூடங்களில் தூய்மை பேணப்படுவதில்லை. இது குறித்து மருத்துவமனை நிர்வாகத்திடம் பல தடவைகள் முறையிட்டபோதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தவிர, உணவருந்தும் இடங்களிலும் பெரும் சுகாதார சீர்கேடுகள் நிலவுவதுடன் கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் நிலவுகிறது. எனவே, இவை விடயத்தில் உரிய தரப்பினர் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# மின்சார கட்டண திருத்தம் குறித்து மக்கள் கருத்து அறியும் கூட்டம்!






யாழ்ப்பாணம், மே 28

இலங்கை மின்சார சபையால் முன்மொழியப்பட்ட 2025ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சார கட்டண திருத்தம் தொடர்பான மாற்று பரிந்துரை குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கோரும் நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

கடந்த 23ஆம் திகதி ஆரம்பமான இந்த கலந்துரையாடல் எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி வரை அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் பொதுமக்களின் கருத்துகள் பெறப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிறுவன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்திருந்தார்.

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேரசிரியர் கே. பி. எல். சந்திரலால், பிரதி பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலந்த சப்புமானகே,

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க உள்ளிட்ட பிரதானிகளின் பிரசன்னத்துடன் இந்தக் கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. (ஐ-05)

# நூல் அறிமுக நிகழ்வு



யாழ்ப்பாணம், மே 28

எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் எழுதிய 'இணை கரத்தின் அயற்கோணங்கள்' சிறுகதை தொகுப்பு அறிமுக விழா எங்கட புத்தகங்கள் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது.

சற்குணம் சத்தியதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கவிஞர் மாதவி உமாசுத சர்மா நிகழ்வை தொகுத்து வழங்கியிருந்தார்.

புலவர் ம. பார்வதிநாதசிவம் எழுதி சோலைக்குயில் மாணவர்களால் சிறப்பாக பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வு இனிதே ஆரம்பமானது.

நூல் விமர்சன உரைகளை, யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமார், கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய ஆசிரியை தமயந்தி கணேசானந்தன் ஆகியோர் வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியர் கோகிலா மகேந்திரன் நிகழ்த்தியிருந்தார். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 28

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் வாராந்த சுக்கிரவாரக் கந்தபுராண படன தொடர் 23ஆவது சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபை தலைவர் சி. தயாநாதன் வழங்குவார். தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை இளம்சைவப்புலவர் த. மனோஜ்குமார் "வழிநடை படலம்" என்னும் விடயப் பொருளில் ஆற்றுவார். (ஐ)

# 'நீர்த்தகடல்' ஆவணப்படம் பூநகரியில் திரையிடப்பட்டது

கிளிநொச்சி, மே 28

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட 'நீர்த்த கடல்' ஆவணப்படம் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் பூநகரி, ஜெயபுரம் சமாசத்தில் அண்மையில் திரையிடப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்ற நிரஞ்சன் பரிளா, "மீன்பிடி சிறு தொழிலாளர்கள் கடலட்டை பண்ணைகளால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எமது பூநகரியில் கடலட்டை பண்ணைகள் அமைப்பதற்கு எதிராக போராட்டங்கள் பல முன்னெடுத்திருந்தோம். நானும் அதில் கலந்துகொண்டிருந்தேன். இதுவரையிலும் எமக்கான நிரந்தர தீர்வு கிட்டவில்லை. இந்த ஆவணத் திரைப்படம் எமது பிரச்னைகளை வெளிப்படுத்தியிருக்கிறது", என்று கூறினார்.

வடக்கு - கிழக்கு தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்பு பண்ணைகள் மூலம் கடல்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும் நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன? சூழல் சமநிலையும் கடலோர பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பன குறித்து இந்த ஆவணப்படம் ஆராய்கிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.05.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## காணி பிரச்னை தீர்ந்துவிட்டதா?

காணி சுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் திரும்பப் பெற்றிருக்கிறது. இதனை ஒரு வெற்றியாகவும் இதற்கு தங்களுடைய அரசியல் மற்றும் இராஜதந்திர நகர்வுகளே காரணம் என்பதுபோல், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறார். குறிப்பாக, கொழும்பிலுள்ள இராஜதந்திர தரப்புகளின் அழுத்தங்கள் அரசாங்கத்தின் பின்வாங்கலுக்கு பிரதான காரணமென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இராஜதந்திர அழுத்தங்களுக்கு அடிபணிந்துதான் அநுர அரசாங்கம் தங்களுடைய நிலைப்பாட்டை மாற்றியிருக்கிறது என்றால் யுத்தத்துக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர சந்திப்புகளின் ஊடாக பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லவா? ஆனால், அவ்வாறு எதுவும் நிகழவில்லை.

அடுத்தது, சட்ட ரீதியான நடவடிக்கை காரணமாக அநுர அரசாங்கம் இறங்கி வந்திருக்கிறது என்றால், கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான நகர்வுகளால் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்தவொரு விடயமும் நிகழவில்லை. இன்றுவரையில் தனியார் காணியில் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தையிட்டி விகாரை தொடர்பிலேயே எந்தவொரு மாற்றமும் நிகழவில்லை. தனியார் காணியில் கட்டப்பட்டுள்ள விகாரையை அகற்ற முடியாதபோது அரச காணியில் கட்டப்பட்டுள்ள விகாரைகளை எவ்வாறு அகற்ற முடியும்? குருந்தூர் விகாரை, தையிட்டி விகாரை விடயத்தில் ஏன் இராஜதந்திர தரப்புகளின் அழுத்தம் பயன்படவில்லை?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் காணி சுவீகரிப்பு விடயத்தை ஒரு துருப்புச்சீட்டாகவே பயன்படுத்தியிருக்கிறது. பின்னர் அரசாங்கமே அதனை தற்காலிகமாக கைவிட்டிருக்கிறது. ஆனால், காணி சுவீகரிப்பு விவகாரம் முடிந்துவிடவில்லை. அது மீண்டும் ஒரு கட்டத்தில் தலைதூக்கலாம். மேலும், வடக்கு - கிழக்கின் காணிப் பிரச்னை என்பது ஓர் அரசியல் விவகாரம். காணி விவகாரமே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தின் அடிப்படையான பிரச்னையாகும். வடக்கு - கிழக்கை பூர்விகமாகக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்க மறுப்பதற்கு பின்னாலுள்ள பிரதான சிங்கள அச்சங்களில் ஒன்று காணி அதிகாரமாகும்.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதை சிங்கள தேசியவாத சக்திகள் தொடர்ந்தும் எதிர்த்து வருவதற்கு பின்னாலுள்ள பிரதான காரணமும் காணிதான். காணி, பொலிஸ் அதிகாரம் தமிழர் கைகளுக்கு செல்லக்கூடாது என்னும் அடிப்படையில்தான் சிங்கள அடிப்படைவாத சக்திகள் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் நாடு பிளவடையும் என்றவாறான பிரசாரத்தை கையிலெடுக்கின்றனர்.

தையிட்டி விகாரை தொடர்பில் பேசிக்கொண்டிருந்தவர்கள் திடீரென்று காணி சுவீகரிப்பு தொடர்பான பிரச்னைக்கு தாவினர். காணி சுவீகரிப்பு தொடர்பான பிரச்னையில் வெற்றி பெற்றுவிட்டதான மகிழ்ச்சியில் இருக்கிறபோது மீண்டுமொரு புதிய பிரச்னை தோற்றுவிக்கப்படும் - அப்போது அனைவரும் அதன் பின்னால் இழுபட்டுச் செல்வர்.

யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினைந்து வருடங்களாக தமிழ் தேசியர்கள் என்போரின் போராட்ட கோஷங்கள் இப்படித்தான் நகர்ந்திருக்கின்றன. ஆனால், விடயங்களை உற்று நோக்கினால் ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, கடந்த பதினைந்து வருடங்களாக தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்னையும் தீரவில்லை. மாறாக, அரசியல் சூழலும் தமிழ் மக்களின் இருப்பும் மேலும் பலவீனமடைந்திருக்கிறது என்பதே உண்மையாகும்.

## கெஹலியவின் இணைப்பு செயலருக்கு விளக்கமறியல்

கொழும்பு, மே 28

லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் முன்னாள் இணைப்பு செயலர் நிஷாந்த பண்டார பஸ்நாயக்கவை எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கின் முதலாவது சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் அப்போதைய இணைப்புச் செயலாளராக இருந்த நிஷாந்த பண்டார பஸ்நாயக்க என்ற மூன்றாவது சந்தேகநபரின் பெயரில் திறக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கில் அமைச்சின் பணம் வைப்பிலிடப்பட்டிருந்ததாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த வங்கிக் கணக்கில் இருந்த பணத்தை கெஹலிய ரம்புக்வெலவின் மகளான அமாலி ரம்புக்வெல தவறாகப் பயன்படுத்தினார் என்று சந்தேகபர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் தெரிவித்தாரென அதிகாரிகள் நேற்று முன்தினம் நீதிமன்றில் கூறினர்.

இரு தரப்பு விவாதங்களையும் கேட்ட நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், அன்றைய தினம் வழக்கை விசாரணைக்கு எடுக்கவும் பணித்தார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் 80 இலட்சம் ரூபாய்க்கு மேல் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தினார் என்று கூறித் தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவரின் மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டிஜிற்றல் மேற்பார்வை குழுவின் தலைவராக ஜனக எம். பி. தெரிவு

கொழும்பு, மே 28

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவராக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனக சேனாரத்ன தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவின் முதலாவது கூட்டம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதன்போதே ஜனக சேனாரத்ன தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

பத்தாவது பாராளுமன்றத்தில் அமைக்கப்படும் 7 துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் நான்கு குழுக்களின் தலைமை பதவி ஆளும் கட்சிக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய குறித்த துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவராக ஜனக சேனாரத்னவின் பெயரை பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க முன்மொழிந்தார். இதனை பாராளுமன்ற உறுப்பினர் ஹசாரா லியனகே வழிமொழிந்திருந்தார். (ஐ)

## உள்ளூராட்சி உறுப்பினர் விவரம் நாளை மறுதினம்வரை அவகாசம்!

கொழும்பு, மே 28


உள்ளூராட்சி சபைகள் தேர்தல் பெறுபேறுகளின் பிரகாரம் அந்தந்தக் கட்சிகள், சுயேச்சை குழுக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் அந்தந்த கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரங்கள் தேர்தல் முடிவடைந்தவுடன் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

ஆனால், தேர்தல் முடிவடைந்து 21 நாட்கள் கடந்தும் உறுப்பினர்களின் விவரங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அத்துடன், உள்ளூராட்சி அதிகார சபைகளின் பதவி காலம் ஜூன் 02ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்பதால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரங்களை மேற்குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 28 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 14
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவிதியை




**மேடம்**
இதுவரை இருந்த அலைச்சல், டென்ஷன், கோபம் யாவும் நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சி வசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்கள் நிறைவேறும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். நெருங்கியவர்களுக்காக சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். மரியாதை கூடும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். தொழில்லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசின படுத்த வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
கடினமான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**தனுசு**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**மகரம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சகஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**கும்பம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

# சுற்றுலாத்துறை, கழிவகற்றல் தொடர்பில் உலக வங்கிக் குழுவினர் யாழில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சுற்றுலாத்துறை, கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் உலக வங்கிக் குழுவினர் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உலக வங்கிக் குழுவினருடன் விசேட சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிலையான பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டுமாணம் மற்றும் சுற்றுலாத் துறைகளை விருத்தி செய்வது தொடர்பில் தற்போதய அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் உலக வங்கி கடந்த இரண்டு மாதங்களாக பொருத்தமான திட்டங்கள் தொடர்பில் களத்தரிசிப்புக்கள் செய்து ஆராய்து அடிப்படைத்தரவுகளை பெற்றிருந்தது. இதன் இறுதி அங்கமாக துறை சார்ந்து காணப்படும் அபிவிருத்தித் தேவைப்பாடுகள், தடைகள், அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராய்து திட்டங்களை நிச்சியப்படுத்தும் வகையில் கடந்த மூன்று தினங்களாக வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட செயலாளர்களை சந்தித்து வருகின்றனர். அந்த வகையில் உலக வங்கியின் இலங்கைக்கான செயல்பாட்டு முகாமையாளர் அபிட் கலி செயல்திட்ட தலைவர் காயத்திரி சிங் மற்றும் உலக வங்கியின் ஏனைய பிரதிநிதிகள் உள்ளிட்ட ஆறு பேர் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடியதுடன், அதனைத் தொடர்ந்து துறைசார் திணைக்களங்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பதில் அரசாங்க அதிபரால் மாவட்டத்தின் விவசாயம், மீன்பிடி அபிவிருத்திக்கான தேவைகள், அச்சுவேலி மற்றும் காங்கேசன்துறை கைத்தொழில் வலயத்துக்கான புதிய முதலீடுகள், யாழ்ப்பாணம் கோட்டை மற்றும் யாழ்ப்பாணம் பழைய கச்சேரி போன்றவற்றை மரபுசார் சுற்றுலா நோக்கில் விருத்தி செய்தல், சரசாலை மற்றும் மண்டைதீவு சிறுதீவுப் பகுதிகளை சூழல் சார் சுற்றுலா மையங்களாக மாற்றுதல், நெடுந்தீவினை சுற்றுலா நோக்கில் முழுமையான அபிவிருத்தி கொண்ட தீவாக மாற்றுதல் போன்ற விடயங்களுடன், யாழ். மாவட்டத்தில் பிரதேச ரீதியாக டிஜிற்றல் அடிப்படையிலான வானிலை அவதானிப்பு நிலையங்களை நிறுவுதல் போன்றவற்றுக்கான நிதி தேவைப்பாடு குறித்து எடுத்துக் கூறப்பட்டது. மேலும், மீன்பிடிப் படகுத்தள அபிவிருத்தி, போதைவஸ்து பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாகாண ரீதியான புனர்வாழ்வு நிலையம், உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாகாண ரீதியான காப்பகம், மற்றும் யாழ்ப்பாணம் நகர அபிவிருத்தி, வெள்ள வடிகாலமைப்பு அபிவிருத்தி, கழிவு நீர் சுத்திகரிக்கும் செயல்திட்டம், கழிவகற்றல் முகாமைத்துவம் போன்ற விடயங்களுக்கான அவசியப்பாடு குறித்து உலக வங்கி பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் பின்வரும் செயல்திட்டங்கள் முன்னுரிமையாகவுள்ளதாக உலக வங்கிக் குழுவினரிடம் முன்வைக்கப்பட்டது.

1.யாழ்ப்பாண நகர வெள்ள வடிகாலமைப்பு அபிவிருத்தி,

2.கழிவு நீர் சுத்திகரிக்கும் செயல்திட்டம்,

3.மாவட்டத்திலுள்ள குளங்களைப் புனரமைக்கும் செயல் திட்டம்,

4.யாழ். நகர திண்மக்கழிவு முகாமைத்துவம்,

5.யாழ்ப்பாணம் கோட்டை மற்றும் யாழ்ப்பாணம் பழைய கச்சேரி போன்றவற்றை மரபு சார் சுற்றுலா நோக்கில் விருத்தி செய்தல்,

6.யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மீன்பிடி படகுத்தளம் மற்றும் மீன்பிடி துறைமுக அபிவிருத்தி,

7. அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கான புதிய முதலீடுகள்,

8. உள்ளூராட்சி சபைகளின் திண்மக்கழிவு முகாமைத்துவம் போன்ற திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன. (எ)

## திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 28

சிறுப்பிட்டி மேற்கு அருள் மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவு தொடர் -07 எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் செ. த. குமரன்

"குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்" என்னும் விடயப் பொருளில் சொற்பொழி நிகழ்த்துவார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 28

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் பிராந்திய தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பில் யாழில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்ஸ்மன் அபயசேகர யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதில், யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் தேவைப்பாடுகள் சார் விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி, சுற்றுலாத்துறை மேம்பாடு, தாழையடி குடிநீர்த்திட்டம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள், வங்கிக் கடன் [illegible], தொழில் தேடுவோருக்கான வேலைத் திட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து,

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் பிராந்திய தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பில் பதில் அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை இனங்காணல், நிதி சார்ந்த விடயங்களை வங்கிகளுடன் கலந்துரையாடல் மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் பிராந்திய தொழில் முயற்சி அபிவிருத்தி மேம்பாடு, ஏற்றுமதி, பல்கலைக்கழகங்களில் புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல், பாடசாலைகளில் புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் பிரதிப்பணிப்பாளர் வசந்த சேனநாயக்க, உதவிப்பணிப்பாளர் சசிகதிமெல் மற்றும் குழுவினர் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி, கைத்தொழில் அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் மற்றும் மாவட்ட உதவிப் பணிப்பாளர், மாவட்ட உதவி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப்பணிப்பாளர், வர்த்தக சம்மேளனத்தின் தலைவர், வங்கிகளின் பிரதிநிதிகள், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகர சபையில் அரசுடன் இணையமாட்டோம்!

### பெரமுன பொதுச் செயலர் அறிவிப்பு

கொழும்பு, மே. 28

**கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்க இடமளிக்கப்போவதில்லை என பொது ஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போதைய அரசாங்கம் கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைக்க தகுதியானவர்கள் அல்ல என்பதை கொழும்பு வாழ் பெரும்பான்மையான மக்கள் தீர்மானித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அதனையே பிரதிபலிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளது.

ஆகவே கொழும்பு மாநகரசபையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியமைக்க இடமளிக்கப் போவதில்லை.

பெரும்பான்மை மக்களின்



ஆணைக்குழு அமைய செயற்படுவதற்கே நாம் எதிர்பார்த்துள்ளோம்.

இந்த அரசாங்கத்துக்கு எதிரான அணிக்கு ஆதரவழிப்பதில் எமக்கு எந்த பிரச்னையும்இல்லை ஆனால் கட்சிக்கோ , நபர்களுக்கோ உதவப்போவதில்லை. மாறாக மக்களின் ஆணைக்கு அமையவே நாம் செயற்படுகின்றோம்-என்றார். (அ)

# வருட இறுதிக்குள் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும்

### வஜிர அபேவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, மே. 28

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் ஆரோக்கியமானதாக இல்லை. இந்நிலை தொடர்ந்தால் வருட இறுதிக்குள் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்போமென ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இடம்பெற்ற முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெறுபேறுகளை பார்க்கும் போது மக்களுக்கு அரசாங்கத்தின் மீது இருந்த நம்பிக்கை குறைவடைந்துள்ளதை தெளிவாகக் காட்டுகிறது. மக்கள் செல்வாக்கை இழந்து வருகின்றதை தற்போது அரசாங்கமும் உணர்ந்துள்ளது. தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் அனைவரையும் திருடர்கள் என்றே தேசிய மக்கள் சக்தி தெரிவித்து வந்தது. அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் எனவும் பிரசாரம் செய்துவந்தார்கள்.

ஆனால் தேர்தலில் அரசாங்கம் எதிர்பார்த்த வெற்றியை



மக்கள் வழங்கவில்லை. 180 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆட்சிக்கு வந்த அரசாங்கம் ஒன்று குறுகிய காலத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இந்தளவு பின்னடைவை சந்தித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். அரசாங்கத்தின் இயலாமையை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச்சென்ற வழியை தவிர வேறு வழியில்லை. இந்த வழிக்கு மாற்றமாக பயணித்தால் நாடு வீழ்ச்சியடையும் என்றே தெரிவித்திருந்தோம்.

தற்போது அரசாங்கம் செல்லும் பயணத்தை பார்க்கும் போது இந்த வருட இறுதிக்குள் நாடு வீழ்ச்சியடையும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு ஒன்றிணைந்துள்ள எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்போம்-என்றார்.

# அரசாங்க சேவையில் 15,073 வெற்றிடங்கள்!

### ஆட்சேர்ப்பு செய்ய அனுமதி

கொழும்பு, மே. 28

அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு (2) அறிக்கைகள் ஊடாக 18 நிரல் அமைச்சுக்கள், 04 மாகாண சபைகள் மற்றும் 02 விசேட செலவு அலகுகளில் நிலவும் 15,073 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விதந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த அறிக்கை மூலம் விதந்துரை செய்யப்பட்ட ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (அ)

# கரையோர ரயில் சேவை பாதிப்பு!

கொழும்பு, மே. 28

கரையோர மார்க்கமூடான ரயில் சேவை நேற்று பாதிக்கப்பட்டது.

காலியில் இருந்து மருதானை நோக்கி பயணித்த ரயில் அம்பலாங்கொடை ரயில் நிலையத்திற்கு அருகில் பழுதடைந்ததால் இந்த நிலை ஏற்பட்டது.

அம்பலாங்கொடை அருகே 311 ஆம் இலக்க அஞ்சல் ரயில் தொழில்நுட்பக் கோளாறை சந்தித்துள்ளதாகவும், இதனால் கடலோரப் பாதையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை குறைக்க அரசு விசேட பொறிமுறை!

கொழும்பு, மே. 28

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் கூடிய பல் துறைசார் பொறிமுறையை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2025.03.03 அன்று இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்ட புதிய அரசின் கொள்கைச் சட்டகத்தில் "பாதுகாப்பான சிறுவர் உலகம் - ஆக்கபூர்வமான எதிர்கால சந்ததி" எனும் கொள்கை ரீதியான கட்டப்பாட்டின் பிரதான கோட்பாடாக அமைகின்ற பிள்ளைகளுக்கு இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் அனைத்துவித பாதுகாப்புத் தொடர்பாக பல் வேறு விதமாக தலையிடுகின்ற பங்காளர்கள் சிலர் சிறுவர் விவகார அமைச்சு, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, மற்றும் இலங்கை பொலிஸ் முக்கிய பணிகளை ஆற்றி வருகின்றது.

பிள்ளைகளுக்கு இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் அனைத்துவித வன்முறைகள் தொடர்பாக தேசிய பாதுகாப்பு அதிகாரசபையால் 24 மணிநேர முறைப்பாடுகளை மேற் கொள்ளக்கூடிய வசதிகளை வழங்கியுள்ளது.

ஆயினும், முறையான வகையில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப் பங்களும் அதிகளவில் காணப் படுகின்றமை கண்டறியப்பட் டுள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் துரிதமாக தலையிட்டு செயற்படுவதற்கு இயலுமாகும் வகையில் கீழ்க்காணும் படிமுறைகளை மேற்கொள்வதற்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய தேசியமட்டக் குழுவொன்றை நியமித்தல்.
- பிள்ளைகளுக்கு எதிராக இடம்பெறுகின்ற உடலியல் ரீதியான தண்டனைகளை இல்லாதொழிப்பதற்கு இயலுமாகும் வகையில் தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் வழக்குக் கோவையை துரிதமாக திருத்தம் செய்தல்.
- பிள்ளைகளுக்கு எதிராக இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் பற்றி அறிக்கையிடும் போது பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மீண்டும் மீண்டும் பாதிப்புக்குள்ளாவதைத் தடுப்பதற்கு இயலுமாகும் வகையில் பொருத்தமான ஏற்பாடுகளை உட்சேர்த்து, தற்போது வரை வாக்கம் செய்யப்படுகின்ற ஊடக ஒழுக்கநெறிக் கோவையை துரிதமாக வெளியிடல்.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் தனித்துவ அடையாளங்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் வெகுசன ஊடக நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடக செய்தித் தொடர்பாடலாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக குற்றத்தால் பலியானவர்கள் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உடனடி தலையீடுகளைப் பெற்றுக் கொள்ளல். -ஆகியவை இதில் அடங்கும். (அ)

# நோர்வூட் பிரதேச செயலகம் ஒருபோதும் இடமாற்றப்படாது!

### ஜீவனிடம் பிரதேச செயலர் உறுதியளிப்பு

கொழும்பு, மே. 28

நோர்வூட் பிரதேச செயலகம் ஹற்றன் நகருக்கு இடமாற்றம் செய்யப்படாமல், தற்போது இருக்கும் கட்டிடத்திலேயே தொடர்ந்து இயங்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானிடம், நோர்வூட் பிரதேச செயலக செயலாளர் ஜி.எஸ்.டி கம்லத் தெரிவித்துள்ளார்.

நோர்வூட் பிரதேச செயலக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின்போது, பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேச செயலக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஹற்றன் - டிக்கோயா நகர சபை மண்டபத்தில் (டிக்கோயா) நேற்று நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான்,

" சிறுநீரக நோய் தாக்கத்திற்கான வைத்திய சேவைகளை வழங்குவதற்காக வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறைகள் நிலவுவதால் அதனை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." என்று வலியுறுத்தினார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியிலான போதைப் பொருள் பாவனையும் சமூகப் பிரச்னையாகும். மலையகத்திலும் இப்பிரச்னை உள்ளது. இதனை தடுப்பதற்கு காவல்துறை ஊடாக நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு கண்காணிப்பு குழு அமைத்தோம். அதில் கட்டாயமாக ஒரு பெண் பொலிஸ் அதிகாரியும் இருப்பார். அந்த செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பித்தால் இந்த பிரச்சினையை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.

மேலும் எங்களது கோரிக்கையை ஏற்று நோர்வூட் பிரதேச செயலக இடமாற்றத்தை நிறுத்தியமைக்காக இந்த நேரத்தில் அரசங்கத்திற்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். " எனவும் ஜீவன் தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச செயலக செயலாளர் ஜி.எஸ்.டி கம்லத் தலைமையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், கலைச்செல்வி, ஹற்றன்-டிக்கோயா நகர சபை செயலாளர், மஸ்கெலியா பிரதேச சபை செயலாளர், நோர்வூட் பிரதேச சபை செயலாளர், அரச நிறுவன அதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், கிராம சேவகர்கள் என பலர் கலந்துக்கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பேரை பாதுகாக்க ஐ.தே.கவை பலியாக்காதீர்!

## ரவி கருணாநாயக்க கோரிக்கை



கொழும்பு, மே. 28

**இரண்டு பேரை பாதுகாப்பதற்கான முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சியை ரணில் விக்ரமசிங்க இல்லாமலாக்கி விடக்கூடாது என புதிய ஜனநாயக முன்னணியின் பாரா ளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ஐக்கிய தேசியக் கட்சியி லுள்ள இரண்டு பேரிடம் இந்த கட்சியை இல்லாமலாக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது.

எம்மை இங்கிருந்து விரட் டிவிட்டு, அவர்கள் தமது சிரேஷ்டத்துவத்தின் அடிப்ப டையில் பதவிகளைப் பெற முயல்கின்றனர்.

ரணில் ஜனாதிபதியான போது, அந்த இருவரில் ஒருவர் பாராளுமன்றத்திலும் மற்றை யவர் ஜனாதிபதி அலுவலகத்தி லும் இருந்தனர்.

அவர்களின் பணயக் கைதி யாக ரணில் மாறியுள்ளதுடன், அவர்கள் இருக்கும் வரை ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைவது சாத்தியமில்லை.

அவர்களை நீக்கிவிட்டா வது இந்த இணைவைச் சாத் தியப்படுத்துவதற்கு நாம் தயா ராகவுள்ளோம். குறித்த இருவ ரினது செயற்பாடுகள் தொடர் பில் ருவான், ஹரீன், மனுஷ, அகில, தலதா ஆகியோர் தொடர்ந்தும் அமைதி காக்கக் கூடாது.

கொழும்பு மாநகர சபையில் 2018 ஆம் ஆண்டில், 60 இற்கும் மேற்பட்ட ஆசனங்களைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று 13 ஆசனங் களே எஞ்சியுள்ளன. எனவே, இரண்டு பேரைப் பாதுகாப்ப தற்காகக் கட்சியை பலியாக்கக் கூடாது என ரணில் விக்கிரம சிங்கவிடம் கோருகின்றோம்- என்றார். (அ)

# தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்த தரம் 7 மாணவன்!

கொழும்பு, மே. 28

அம்பலாங்கொடை பகுதி யில் நேற்று 13 வயது பாட சாலை மாணவன் ஒருவன் தற் கொலை செய்து கொண்டதா கத் தெரிவிக்கப்படுகிறது.

தரம் 7 இல் கல்வி பயிலும் பாடசாலை மாணவன் ஒருவரே நேற்று காலை அவரது வீட்டில் உயிரிழந்த நிலையில் காணப் பட்டதாக பொலிஸார் கூறினர்.

குழந்தையின் பெற்றோர், அவரது மரணத்துக்கு மன உளைச்சல் தான் காரணம் என்று கூறியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து அம்பலாங்கொடை பொலிஸ ார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த சில வாரங்களில் இலங்கையில் தற்கொலை களால் பல மரணங்கள் பதிவாகி யுள்ளன.இது அதிகாரிகளின் விசாரணைகளைத் தூண்டி யுள்ளது.

முதல் சம்பவம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பதிவா னது.அங்கு இரண்டாம் ஆண்டு மாணவர் ஒருவர் தனது வீட் டில் தற்கொலை செய்து கொண்டார்.

இது பகிடிவதை காரண மாக ஏற்பட்டதாகக் கூறப்ப டுகிறது.

வயம்ப தேசிய கல்வியியல் கல்லூரியில் அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தினால் கல் லூரி விடுதியில் இரண்டாம் ஆண்டு மாணவி ஒருவர் தற் கொலை செய்து கொண்ட மையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கணக்காய்வாளர் நாயகம் விரைவில் நியமிக்கப்படுவார்



கொழும்பு, மே. 28

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு நிலவும் வெற்றிடம் தொடர்பான பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என அமைச்சரவைப் பேச்சாள ரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அர சாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போது ஊடகவியலாளர் ஒரு வர் எழுப்பிய கேள்விக்கு பதில ளிக்கும்போதே அமைச்சர் இத னைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு துறையிலுள்ள நிபு ணத்துவமும் அனுபவமும் வாய்ந்த ஒருவரின் பெயரை ஜனாதிபதி அநுர குமார திஸ ாநாயக்க பரிந்துரை செய்தி ருந்தார்.

எனினும் அதனை அரச மைப்புப் பேரவை நிராகரித் துள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு அந்தத் திணைக்களத் திலிருந்தே ஒருவர் தெரிவு செய் யப்படவேண்டும் என்ற நியதி கிடையாது. பொருத்தமான ஒருவரையே அரசாங்கம் பரிந்துரைத்திருந்தது.

அரசியலமைப்பு பேரவை என்பது அரசியல் சார்பற்றது எனக் கூற முடியாதல்லவா?

எவ்வாறெனினும் இந்தப் பதவி வெற்றிடம் தொடர்பி லான பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும்-என்றார். (அ)

# 477 பேர் கைது!

கொழும்பு, மே. 28

நாடு தழுவிய ரீதியில் முன் னெடுக்கப்பட்ட போதைப் பொருளுக்கு எதிரான சுற்றிவ ளைப்பு நடவடிக்கைகளுக்கு அமைய, நேற்று முன்தினம் மாத்திரம் முன்னெடுக்கப் பட்ட 478 சுற்றிவளைப்பு நடவடிக்கை களில் 477 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அந்த வகையில் 8 கிலோ கிராம் 743 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொரு ளுடன் 170 பேர் கைது செய்யப்பட்டுள் ளதாக பொலிஸ் தலைமையம் தெரிவித்துள்ளது. அதேவேளை 193 கிராம் 577 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப்பொரு ளுடன் 150 பேரும், 190 கிராம் 398 மில்லிக் கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 147 பேரும், 108 போதை மாத்திரை களுடன் ஆறு பேரும் கஞ்சா செடிகளுடன் நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# மூன்று இலங்கையர்கள் அல்பேனியாவில் கைது!

கொழும்பு, மே. 28

போலி ஆவணங்களுடன் காபே-தானே எல்லைக் கடவை யைக் கடக்க முயன்ற மூன்று இலங்கையர்களை அல்பேனிய எல்லை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் இத்தாலியை தங்கள் பயண இலக்காகக் கொண்டிருந்தாக கைது தொடர்பில் அல்பேனிய பொலிஸார் வெளியிட்டிருந்த அறிக்கையில் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

அதேநேரத்தில், கைதனா நபர்களிடம் காணப்பட்ட போலியான ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதான நபர்கள் 57, 21 மற்றும் 36 வயதுடைய நபர்கள் ஆவர்.

சட்டவிரோத நடவடிக்கை களைத் தடுப்பதற்காக, உளவுத் துறை வழங்கிய தகவலின் அடிப்படையில், எல்லை காவல் சேவைகளின் பணியின் தொடர்ச்சியாக, காபே தானே எல்லை கடக்கும் இடத்தில் இந்த கைது முன்னெடுக்கப்பட் டுள்ளது. (அ)

# சுற்றுலா பயணிகளை பாதுகாக்கவேண்டும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, மே. 28

சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செயற் படுவோர் குறித்து விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டுள்ள தாக அமைச்சரவைப் பேச்சாள ரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அர சாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போது ஊடகவியலாளர் ஒரு வர் எழுப்பிய கேள்விக்கு பதி லளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை நாம் பாதுகாக்கவேண்டும். அது எமது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அவ்வாறு பாதுகாக்கப்படும் பட்சத்தி லேயே போட்டியான உலகத் தில் எமக்கான வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இந்நிலையில் சுற்றுலாத்து றைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு சம்பவங் கள் இடம்பெறுகின்றன. பல மாதங்களுக்கு முன்னர் நடந்து நீதிமன்ற விசாரணையில் உள்ள விடயங்கள்கூட தற்போது சமூக வலைத்தளங்களில் பதி வேற்றப்படுகின்றன.

இவ்வாறான சம்பவங்களை நாம் வெவ்வேறாக பார்க்க வில்லை.

எமது சுற்றுலாத்து றைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகை யில் திட்டமிட்டு செயற் படுத் தப்படுகிறதா என்பதை ஆராய் கிறோம்-என்றார். (அ)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை!

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு





கொழும்பு, மே. 28

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக் கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-நாட்டில் உள்ள பாடசா லைகளில் 40 ஆயிரம் ஆசிரி யர்களுக்கான வெற்றிடம் காணப்படுகிறது. இதனை பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்திலும் அறிவித் தார். ஆயினும் அந்த பற்றாக்கு றையை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எந்தவொரு நடவ டிக்கையும் முன்னெடுக்கப்பட வில்லை. பிரச்னைகள் உள்ளன என மேடைகளில் பேசிக் கொண்டிருப்பது பொருத்த மானது அல்ல.

அரசாங்கம் என்ற வகையில் தீர்வுகளை முன்வைக்க வேண்டும்.

அடுத்த வருடம் முதல் தரம் 01 மற்றும் தரம் 06 ஆகியவற் றில் பாடத்திட்டங்களில் மாற் றத்தை ஏற்படுத்தப்போவதாக கல்வி அமைச்சர் என்ற வகை யில் பிரதமர் ஹரிணி அமரசூ ரிய அறிவித்தார். எனினும் அவ்வாறான ஏற்பாடுகள் பற்றி ஆசிரியர்களிடம் கலந்துரையா டப்படவில்லை.

உண்மையில் அதிபர், ஆசிரி யர்களின் சம்பளப் பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிறது. தொழிற்சங்க ரீதியாக பல்வேறு முரண்பாடுகளை தீர்க்க வேண் டியுள்ளது. ஆயினும் பொறுப் புள்ள அரசாங்கம் என்ற வகை யில் திட்டங்கள் எதுவும் நடை முறைப் படுத்தப் படவில்லை- என்றார். (அ)

# விகாரையில் புகுந்து விலையுயர்ந்த இரத்தினக் கற்களை திருடியவர் கைது!

கொழும்பு, மே. 28

லக்கலையில் உள்ள ஒரு விகாரையில் உள்ள ஒரு பீடத் திற்குள் புகுந்து நான்கு விலை யுயர்ந்த இரத்தினக் கற்களைத் திருடிய ஒருவர், துப்பாக்கி மற்றும் திருடப்பட்ட இரத்தி னக் கற்களுடன் நேற்று பொலிஸாரால் கைது செய் யப்பட்டார்.

தொரதெனியாவைச் சேர்ந்த 38 வயதுடைய குறித்த நபர், ஒரு வர்த்தகர் ஆவார்.மாத் தளை பொலிஸ் குற்றப்பிரிவு சந்தேக நபரை பக்கமுன பகுதி யில் வைத்து கைது செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து புதிய தலைமைத்துவம் வேண்டும்!

## சமிந்த விஜேசிறி கோரிக்கை

கொழும்பு, மே. 28

**அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தலைமைத்துவம் உருவாக வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பக்கூடிய சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த குழு ஐக்கிய மக்கள் சக்தியிலேயே இருக்கிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அவ்வாறானவர்கள் கிடையாது.

மேலும், எமது கட்சியின் சார்பாக பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்கள் ஊழலற்றவர்கள். இதனை நான் பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதலால் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தலைமைத்துவம் உருவாகவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பண்டாரவளை அமைப்பாளர் பதவியிலிருந்து



விலகியமை தொடர்பில் பலரும் பல்வேறு கேள்விகளை முன்வைக்கிறார்கள். உண்மையில் கடந்த தேர்தல்களில் எனது தொகுதியில் வெற்றி பெற முடியவில்லை.

ஆதலால் அதனைக் கருத்திற் கொண்டு பதவி விலக வேண்டும் என தீர்மானித்தேன். இது கட்சியில் உள்ள ஏனையோருக்கும் முன்னுதாரணமாகும்-என்றார். (அ)

# கோரிக்கை நிறைவேற்றப்படாவிடில் விரைவில் தொழிற்சங்க நடவடிக்கை!

## சுகாதார தொழில் வல்லுநர்கள் சங்கம்

கொழும்பு, மே. 28

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக சுகாதார தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நளிந்த ஜயதிஸ்ஸ என்பவர் இந்த நாட்டுக்கு பல்வேறு பிரச்னைகளை உருவாக்கும் நபர் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

உலக சுகாதார ஸ்தாபனத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் உரையாற்றிய போது சுகாதார ஊழியர்கள் மீது விமர்சனங்களை முன்வைத்துள்ளார். உண்மையில் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

சுகாதார அமைச்சர் வாய்வார்த்தைகளில் உறுதிமொழிகளை வழங்குகிறார். ஆயினும் அவற்றை அவர் நடைமுறைப் படுத்துவதில்லை.

நாம் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைக்கவில்லை. சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை சுகாதார ஊழியர்கள் எதிர்நோக்கியுள்ளார்கள். எனினும் அவை தொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசாங்கத்திடமும் சுகாதார அமைச்சரிடமும் அமைச்சின் செயலாளரிடமும் எமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அவை நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க ரீதியான நடவடிக்கையில் ஈடுபட வேண்டி ஏற்படும்-என்றார். (அ)

# கல்வியியற் கல்லூரி மாணவி உயிர்மாய்ப்பு முழுமையான விசாரணைக்கு குழு நியமனம்

கொழும்பு, மே. 28

வயம்ப தேசிய கல்வியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்துவதற்காக விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், குறித்த விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அதுதொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கல்லூரியின் முதல்வரிடமிருந்து விரிவான அறிக்கை ஒன்று பெறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் சம்பவ இடத்தில் விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், அனைத்து தேசிய கல்வியியல் கல்லூரி முறைமையின் நிர்வாக மற்றும் கல்வி நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்து, தேவையான மாற்றங்களை உடனடியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# பொது நிர்வாக அமைச்சர் கனடா தூதருடன் சந்திப்பு

கொழும்பு, மே. 28

இலங்கையில் அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக கனடா அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும், அவசியமான எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அதற்கு ஒத்துழைப்பை வழங்கும் நோக்குடன் இந்நாட்டின் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு கவனம் செலுத்தியுள்ளதாகவும், இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக் வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக, மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச்.அபயரத்னவுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பன்மொழி பயன்படுத்தும் மக்கள் தொகை கொண்ட இலங்கையில், குறிப்பாக பொது சேவைகளை வழங்குவதில், அலுவல் மொழிக் கொள்கையை செயல்படுத்துவதில் இரு தரப்பினரும் கவனம் செலுத்தியுள்ளனர். (அ)

# கத்தோலிக்க ஆலோசனை குழுவுக்கு நியமன கடிதம்!

கொழும்பு, மே 28

நாட்டின் மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆலோசனை குழுக்களை கல்வி அமைச்சு நியமித்து வருகிறது. இதற்கமைவாக கத்தோலிக்க ஆலோசனை குழுவுக்கான நியமன கடிதங்கள் கல்வி, உயர்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரியவால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

கத்தோலிக்க ஆலோசனை குழுவுக்கான நியமனங்கள் மூன்று வருட காலத்துக்கு செல்லுபடியாகும் என்பதுடன், கல்விக்குப் பொறுப்பான கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் மேற்றிராணியார் மற்றும் சிலாபம் மேற்றிராணியார் உட்பட ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் 20 பங்கு தந்தைகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

கத்தோலிக்க ஆலோசனைக் குழு கத்தோலிக்க கல்வி தொடர்பாக கல்வி அமைச்சுக்கு மட்டுமல்ல கல்வி அமைச்சருக்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் அமைச்சில் நடைபெறும் கத்தோலிக்க செயல்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கும். (ஐ)

# சிக்குன்குனியா படுதீவிரம்!

கொழும்பு, மே. 28

இலங்கையில் தற்போது சிக்குன் குனியாவின் தீவிர பரவல் ஏற்பட்டுள்ளது.

முக்கிய நகர்ப்புறங்களில் இது வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இது கிட்டத்தட்ட 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த வைரஸின் மிகக் கடுமையான மீள் எழுச்சியைக் குறிக்கிறது.

கடவத்தை, கொத்தொடுவ, பத்தரமுல்லை மற்றும் கம்பஹாவின் நெரிசலான பகுதிகள் ஆகியவை அதிகம் ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

காய்ச்சல், மூட்டு வலி, குளிர் மற்றும் உடல் வலிகள் இதன் பொதுவான அறிகுறிகளாக பார்க்கப்படுகிறது.

சில நோயாளிகளில், மூட்டு வலி வாரக்கணக்கில் நீடிக்கும்.

இந்த வைரஸ் நுளம்பு கடித்தால் பரவுகிறது, ஒருவருக்கு ஒருவர் தொடர்பு கொள்வதன் மூலம் அல்ல.

கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் இது தொடர்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இதேவேளை, இலங்கையில் சிக்குன் குனியா ஒரு சுகாதார ஆபத்து என்று கூறி, அமெரிக்காவும் இங்கிலாந்தும் தங்கள் பயண எச்சரிக்கைகளை புதுப்பித்துள்ளன. (அ)



1950 – 2025

31
சனிக்கிழமை
மே 2025
மாலை 4 மணி



எழுத்தாளரும் ஈழப் போராட்ட முன்னோடிகளில் ஒருவருமான

தோழர்
**புஷ்பராணி**

**நினைவஞ்சலியும் நூல் வெளியீடும்**

தொடக்கவுரை எழுத்தாளர் **தர்மு பிரசாத்**

நினைவுப் பேருரை தோழர் **நவரட்ணராணி**

நூல் வெளியீட்டுரை எழுத்தாளர் **ஷோபாசக்தி**

முதற்பிரதி ஏற்பு தோழர் **ஆன் சரத்மதி** • **தோழர் போல் பிரகலாதன்**

நூல் மதிப்புரை எழுத்தாளர் **சி. மனோகரன்**

நினைவுரைகள்

• தோழர் **அழகிரி** • தோழர் **ராகவன்** • தோழர் **வதனராணி** • தோழர் **தேவதாசன்**
• தோழர் **சாந்தன் தம்பையா** • தோழர் **தரங்கினி** • தோழர் **உதயகுமார்**
• தோழர் **சோலையூரான்** • பத்திரிகையாளர் **துரைசிங்கம்** • எழுத்தாளர் **தர்மினி**
• எழுத்தாளர் **அகரன்** • எழுத்தாளர் **டானியல் ஜெயந்தன்** • தோழர் **வானிலா**
• மற்றும் **நீங்களும்**

நன்றியுரை தோழர் **விதுரன் புஸ்பராஜா**

**இடம்:** 1 Rue Fernand Picquette, 95470 Fosses.
Station: Survilliers fosses. Direction : Orry-la-Ville - RER D 35 min from Gare du Nord


**அனைவரையும் தோழமையுடன் அழைக்கும் புஷ்பராணி குடும்பத்தினர் • ஆக்காட்டி இதழ்**

தொடர்புகளுக்கு: நவரட்ணராணி – +447588581637 | செந்தில் – 0646482832 | தர்மு பிரசாத் – 0652337584

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் பத்து சபைகளில் தமிழர்கள் ஆட்சியமைக்க முடியும்

## முன்னாள் பிரதியமைச்சர் கருணா தெரிவிப்பு



மட்டக்களப்பு, மே 28

**இலங்கைத் தமிழ் அரசு கட்சியினர் விட்டுக் கொடுப்புடன் மக்கள் சார்ந்து தீர்மானம் எடுப்பார்களாக இருந்தால் மட்டக்களப்பில் குறைந்தது பத்து சபைகளில் எந்த பெரும்பான்மைக் கட்சிகளின் ஆதரவு, ஏனைய இனத்தவர்களின் ஆதரவு இல்லாமல் தனித் தமிழ் உறுப்பினர்களாக ஆட்சி அமைக்கக் கூடிய வாய்ப்பிருக்கின்றது என முன்னாள் பிரதியமைச்சரும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் இணைத்தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே மட்டக்களப்பில் கிட்டத்தட்ட 37 ஆசனங்களை கிழக்குத் தமிழர் கூட்டமைப்பாக நாங்கள் பெற்றிருக்கின்றோம்.

கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்பதை நாங்கள் கிழக்கு மாகாண தமிழ் மக்களின் நன்மை கருதி, கிழக்கு மாகாணத்தைத் தமிழரே ஆட்சி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே உருவாக்கினோம்.

அந்த நோக்கத்தின் முதற்கட்டமாக கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் நாங்கள் போட்டியிட்டு அதனூடாக தற்போது 37 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றோம்.

இந்தத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசு கட்சி கூடுதலாக ஆசனங்களைப் பெற்றுள்ளது. அடுத்தபடியாக தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கின்றது. இதில் தமிழ் அரசு கட்சியினர் விட்டுக்கொடுப்புடன் பேச வருவார்களாக இருந்தால் மட்டக்களப்பு மாவட்டத்திலே குறைந்தது பத்து சபைகளில் ஆட்சி அமைக்கக் கூடிய வாய்ப்பிருக்கின்றது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற ஆட்சி அதிகாரங்கள் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில், என்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடும் தமிழர்கள் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதே. தமிழ் அரசு கட்சியினர் முன்வருவார்களாக இருந்தால் நாங்கள் மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயார்.- என்றார்.

(எ)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும்

## சம்பூரில் பெற்றோர் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை, மே 28

சம்பூர் மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று முன்தினம் காலை பாடசாலைக்கு முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் 526 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆசிரியர்கள் 20 பேர் கடமையாற்றுகின்றனர்.

எனினும் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் உள்ளிட்ட 6 முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இதனை நிவர்த்தி செய்து தருமாறு கோரியே இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் சுலோகங்களை ஏந்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்ட இடத்துக்கு வந்த மூதூர் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவதாஷ் ஜெயந்தன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடினார்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க உரிய ஏற்பாடுகளை செய்து தருவதாக தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த இடத்திலிருந்து விலகிச் சென்றனர்.

(எ)

# அரச நியமனம் கோரி பட்டதாரி கவனவீர்ப்பு



திருகோணமலை, மே 28

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக அரச நியமனம் கோரி பட்டதாரி ஒருவர் நேற்று முன்தினம் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.

மாம்பழ வியாபாரி போன்று அவர் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.

கிண்ணியாவை சேர்ந்த குறித்த பட்டதாரி, அரச துறையில் நியமனத்தை வழங்குமாறும் கலைப்பட்டத்தை இல்லாமல் செய்யுங்கள் என்றும் கூறினார். (எ)



# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்!

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பு - நொச்சிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் தவராசா கிருஷான் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 20 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எம். பசீல் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

# அதிகளவு அயடீன் கலந்த உப்பை விற்பனை செய்தவருக்கு அபராதம்

ஏறாவூர், மே 28

மட்டக்களப்பு, ஏறாவூரில் கடை ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்ட உப்பினை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றி பகுப்பாய்வுக்கு அனுப்பியதில் அதிகளவான அயடீன் கலந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து கடை உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில், 10 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். வைற் சோல்ட் இலச்சனையிடப்பட்ட பொதி செய்யப்பட்ட உப்பை நாடு முழுவதும் தடை செய்தது டன் இதனைக் கைப்பற்றி அழிக்குமாறும் தயாரிக்கும் இடத்தை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் ஏறாவூர் பிரதேசத்தில் கடை ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்ட பொதி செய்யப்பட்ட வைற் சோல்ட் என்ற இலச்சனை பதித்த உப்பு பைக்கற்றை சித்தாண்டி பொது சுகாதார பரிசோதகர் கைப்பற்றி அதனை பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு பரிசோதனைக்கு அனுப்பிவைத்தார்.

இந்த நிலையில் ஒரு கிலோ உப்பில் 30 கிராம் அயடீன் இருக்க வேண்டும். ஆனால் குறித்த உப்பில் 84 கிராம் அயடீன் கலந்துள்ளதாகவும் இது மனித பாவனைக்கு உகந்தது அல்ல என பகுப்பாய்வு திணைக்களம் அறிக்கை அனுப்பி வைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த உப்பை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்ததையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.(எ-04)



சர்வதேச கராத்தே சம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவி எம். எவ். செய்னப்புக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட சமூகத்தினால் விசேட வரவேற்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு பீடத்தின் கேட்போர் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

# மூதூரில் கலை இலக்கிய விழா



திருகோணமலை, மே 28

மூதூர் பாட்டாளிபுரம் இளைஞர் வள நிலையத்தின் ஏற்பாட்டிலும் மூதூர் வலயக் கல்வி அலுவலகம், மூதூர் பிரதேச செயலகம் என்பனவற்றின் அனுசரணையில் 15 ஆவது கலை இலக்கிய பண்பாட்டு விழா நேற்று முன்தினம் மூதூர் பாட்டாளிபுரத்தில் நடைபெற்றது.


இதன்போது பாரம்பரிய முறைப்படி ஊர்வலமாக மடைப் பெட்டி எடுத்துவரும் சமய நிகழ்வும் சாமி ஆட்டம், சாமி மறித்து மந்திரத்தால் கட்டுப்படுத்தல் குறிப்பாக தமிழர் பண் பாட்டுக் கலையான சிலம்பம் விளையாட்டும் இடம்பெற்றன.

அத்தோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன. மூதூர் பாட்டாளிபுரம் இளைஞர் வள நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, இளைஞர் வள நிலைய பிரதான செயல்பாட்டாளர் சச்சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பங்கு பற்றினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே இரவில் 355 ட்ரோன்கள் மூலம் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்



கீவ், மே 28

**உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், நேற்று முன்தினம் ஒரே இரவில் 355 ட்ரோன்கள் மூலம் ரஷ்ய இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தியுள்ளது.**

ரஷ்யா - உக்ரைன் இடையே 3ஆவது ஆண்டாக நீடித்து வரும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமெரிக்க முயற்சிகளுக்கு மத்தியில் ரஷ்யா தனது ட்ரோன் வீச்சு தாக்குதல்களை அதிகரித்ததால், கடந்த வாரத்தில் 30 உக்ரைனியர்கள் உயிரிழந்தனர். மற்றும் 163 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பினர் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து வந்தனர். அவர்களின் கோரிக்கையை நிராகரித்து வந்த ரஷ்ய ஜனாதிபதி புடின், சமீபத்தில் தானாக போர் நிறுத்தம் குறித்து பேச்சுகள் நடத்த சம்மதம் தெரிவித்தார்.

இதன்பின்னர் இருநாட்டு முக்கிய பிரமுகர்கள், துருக்கியின் தலைநகரில் சந்தித்து பேச்சுகள் நடத்தினர். அப்போது போர் கைதிகளை பரிமாறிக் கொள்ள இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்தன. ஆனால் போர் நிறுத்தம் செய்வதில் உடன்பாடு எட்டப்படவில்லை.

போர் தொடர்ந்து வரும் நிலையில் ஒப்பந்தப்படி, இரு நாடுகள் இடையே போர்க் கைதிகள் பரிமாற்றமும் நடந்து வந்தது. கடந்த வெள்ளிக்கிழமை, கைதிகளாக வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் மற்றும் பொது மக்கள் 390 பேர், சனிக்கிழமை 307 பேர், ஞாயிற்றுக்கிழமை 303 பேர் பரிமாறிக் கொள்ளப்பட்டனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஒரே நாள் இரவில் 300இற்கும் அதிகமான ட்ரோன்களை ஏவி உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

அணிவகுத்த ட்ரோன்கள் குறித்து உக்ரைன் இராணுவத்தரப்பு கூறுகையில், "உக்ரைனின் யூரி இஹ்நாட் தலைமை விமானப்படை தளத்தை குறிவைத்து திங்கட்கிழமை இரவு ரஷ்யா 355 ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. இது மூன்றாண்டு கால போரில் இதுவரை இல்லாத தீவிர தாக்குதலாகும். இதில் சிலர் காயமடைந்துள்ளனர். உயிர்ப்பலி குறித்த தகவல்கள் உடனடியாக தெரியவில்லை"- என்று தெரிவித்துள்ளது.

(எ)



# பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் கன்னத்தில் அறைந்த மனைவி

ஹனோய், மே 28

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் கன்னத்தில் மனைவி அறைந்ததாக இணையத்தில் வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது.

பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். மக்ரோனுடன் அவரது மனைவி பிரிஜிட் மக்ரோன் உடன் சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் இவர்கள் வியட்நாமுக்கு சென்றனர். இந்த நிலையில் இம்மானுவல் மக்ரோன் தொடர்பில் வீடியோ ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது.

வியட்நாம் தலைநகர் ஹனோயில் விமானம் தரையிறங்கியது.

அப்போது மக்ரோன் பயணித்த விமானத்தின் கதவு திறந்தது. உள்ளேயிருந்து மனைவி பிரிஜிட் மக்ரோனுடன் வெளியே வர தயாராகியிருந்தார். அப்போது திடீரென மக்ரோனின் கன்னத்தில் அவரது மனைவி பிரிஜிட் அறைவது போல உள்ளது. மனைவி பிரிஜிட்டின் முகம் வீடியோவில் தெரியவில்லை. விமானத்தின் கதவு அதனை மறைத்துள்ள நிலையில் அவரது கை ஆக்ரோஷமாக மக்ரோனின் கன்னத்தில் அறைவது போல் அந்த வீடியோ உள்ளது.

மேலும் மக்ரோன் அதனை வெளிக்காட்டாமல் விமானத்தின் கதவின் வழியாக வெளியே உள்ளவர்களை நோக்கி கையை அசைக்கிறார். இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. (எ)

# நைஜீரியாவில் 4 ஆயிரம் பெண்கள் வன்புணர்வு!

## ஐ. நா. அதிர்ச்சி அறிக்கை

அபுஜா, மே 28

நைஜீரியாவில் 4 ஆயிரம் பெண்கள் வன்புணர்வு செய்யப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் ஆளும் அரசாங்கத்தை எதிர்த்து பல்வேறு இனக்குழுவினர், பயங்கரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் போராடி வருகின்றனர். அவர்கள் அவ்வப்போது அங்குள்ள கிராமங்களுக்குள் புகுந்து சூறையாடி கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபடுகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்னர் அங்குள்ள கிராமத்துக்குள் புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர்.

கிளர்ச்சியாளர்களின் தாக்குதலை கட்டுப்படுத்த ஐ. நா. சார்பில் அமைதிப்படையினர் களமிறக்கப்பட்டு உள்நாட்டு இராணுவத்துடன் இணைந்து போராடி வருகின்றனர். இந்த நிலையில், நைஜீரியாவில் கள நிலவரம் குறித்து ஐ. நா. அமைப்பு சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 4 ஆண்டுகளில் நைஜீரியாவில் 700 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பெண்கள், சிறுமிகள் உட்பட சுமார் 4 ஆயிரம் பேர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# புடினுக்கு ஏதோ நடந்துவிட்டது

வாஷிங்டன், மே 28

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சாடியுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா மிக உக்கிரமான வான்தாக்குதலை மேற்கொண்டதை தொடர்ந்தே டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனின் பல நகரங்கள் மீது ரஷ்யா மேற்கொண்ட ஆளில்லா விமானத் தாக்குதல்களில் 13 பேர் கொல்லப்பட்டனர். போர்க் கைதிகள் பரிமாற்றம் மற்றும் போர் நிறுத்தத்துக்கான அமெரிக்காவின் முயற்சிகளுக்கு மத்தியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் தனது சமூக ஊடகப்பதிவில் புடினை கடுமையாக கண்டித்துள்ள ட்ரம்ப், நான் ரஷ்ய ஜனாதிபதியுடன் எப்போதும் சிறந்த உறவை பேணிவந்துள்ளேன். ஆனால் அவருக்கு ஏதோ நடந்துவிட்டது அவர் பைத்தியமாகிவிட்டார் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் முழுவதையும் கைப்பற்றுவதற்கு புடின் விரும்பினால் அது ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் எனவும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

(எ)

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு 11 பேர் காயம்

வாஷிங்டன், மே 28

அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணம் ஹோரி நகரில் உள்ள லிட்டில் ரிவர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு தாக்குதல் இடம்பெற்றது.

கடற்கரை நகரமான இந்தப் பகுதியில் இரவு 09.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர்.

# பனிச்சரிவில் சிக்கி 5 பேர் உயிரிழப்பு

பெர்ன், மே 28

சுவிட்சர்லாந்தில் உள்ள செர்மட் நகரில் 7 ஆயிரம் மீற்றர் உயரமுள்ள பனிமலை அமைந்துள்ளது.

இங்கு 4 ஆயிரம் மீற்றர் உயரமுள்ள ரீம்ப்பிஷ்ஹார்ன் பனிச்சிகரத்தில் நேற்று முன்தினம் பனிசறுக்கு போட்டி நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். பனிச்சறுக்கு போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது திடீரென அங்கு கடும் காற்று வீசியது.

இதனைத் தொடர்ந்து பனிச்சரிவு ஏற்பட்டது. இதனால் பனிக் குவியல்கள் இராட்சத பந்துபோல உருண்டோடி அங்கு பனிச்சறுக்கு விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது மோதியது. இந்தக் கொடூர சம்பவத்தில் வெளிநாட்டினர் உட்பட ஐவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். (எ)

# இந்தியாவுடன் அமைதி பேச்சுகளுக்குத் தயார்

## பாகிஸ்தான் அறிவிப்பு

தெஹ்ரான், மே 28



இந்தியாவுடன் அமைதிப் பேச்சுக்குத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தனது ஈரான் பயணத்தின் போது காஷ்மீர், பயங்கரவாதம், சிந்துநீர் பங்கீடு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட அனைத்து பிரச்னைகளையும் தீர்க்க இந்தியாவுடன் பாகிஸ்தான் அமைதிப் பேச்சுகளை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக ஷெபாஸ் ஷெரீப் கூறியதாக பி. டி. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷ்கியனுடன் தெஹ்ரானில் நடைபெற்ற கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் கூறிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், "காஷ்மீர் பிரச்னை மற்றும் நீர் பிரச்னை உட்பட அனைத்து சர்ச்சைகளையும் பேச்சுக்கள் மூலம் தீர்க்க விரும்புகிறோம். மேலும் வர்த்தகம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு குறித்து நமது அண்டை நாடுகளுடன் பேசவும் தயாராக இருக்கிறோம்.

ஏற்றுக்கொள்ளப்பட்டால், இந்தியா உண்மையிலேயே அமைதியை தீவிரமாகவும் உண்மையாகவும் விரும்புகிறது என்பதைக் காண்பிப்பார்கள். இந்தியாவுடனான மோதலில் எங்கள் நாடு வெற்றி பெற்றது"- என்றும் அவர் கூறினார். (எ)

# இஸ்ரேல் தாக்குதலால் காஸாவில் 52 பேர் பலி

காஸா, மே 28

காஸா முனையில் இஸ்ரேல் இராணுவம் நேற்று அதிரடித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 52 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் அமைப்பினர் பலஸ்தீனின் இஸ்லாமிக் ஜிகாத் ஆயுதக்குழுக்களின் கட்டுப்பாட்டு மையங்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் காஸாவில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட இதுவரை 53 ஆயிரத்து 939 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி அபார வெற்றி

ஜெய்ப்பூர், மே 28

மும்பைக்கு எதிரான போட்டியில் பஞ்சாப் அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டித் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதில் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 69ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த மும்பை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 184 ஓட்டங்கள் எடுத்தது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக சூர்யகுமார் யாதவ் 57 ஓட்டங்கள் எடுத்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப், மார்க்கோ ஜான்சன் மற்றும் விஜய்குமார் வைஷாக் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய பஞ்சாப் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பிரியன்ஷ் ஆர்யா - பிரம்சிம்ரன் சிங் களமிறங்கினர். இதில் பிரம்சிம்ரன் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து ஜோடி சேர்ந்த பிரியன்ஷ் ஆர்யா - ஜோஷ் இங்கிலிஸ் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி பஞ்சாப் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றது. பலம் வாய்ந்த மும்பை பந்துவீச்சை எளிதில் கையாண்ட இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர்.

பஞ்சாப் அணிக்கு வெற்றியை உறுதி செய்த இந்த ஜோடி இலக்கை நெருங்கிய தருவாயில் பிரிந்தது. ஆர்யா



62 ஓட்டங்களிலும் ஜோஷ் இங்கிலிஸ் 73 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இருவரின் விக்கெட்டையும் சாண்ட்னர் கைப்பற்றினார்.

இறுதிக் கட்டத்தில் அணித் தலைவர் ஸ்ரேயஸ் ஐயர் பொறுப்புடன் விளையாடி பௌண்ட்ரி அடித்து ஆட்டத்தை முடித்து வைத்தார். 18. 3 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டுமே இழந்த பஞ்சாப் கிங்ஸ் 187 ஓட்டங்கள் அடித்து அபார வெற்றி பெற்றது. ஸ்ரேயஸ் 26 ஓட்டங்களுடனும் வதேரா 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் பஞ்சாப் கிங்ஸ் அணி 19 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் முதலிடத்தை பிடித்தது. (எ)

## 3ஆவது ரி- 20 போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி


செல்ம்ஸ்போர்ட், மே 28

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் அணிக்கு எதிரான 3ஆவது ரி- 20 போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 தொடர் நடைபெற்று வருகிறது. இதன்படி நடைபெற்ற முதல் இரு போட்டிகளிலும் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ஹெதர் நைட் 66 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் மத்தியூஸ் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் 145 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணியால் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 127 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை முழுமையாக கைப்பற்றியது. (எ)





## பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ்: ஜன்னிக் சின்னெர் வெற்றி

பாரிஸ், மே 28

பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர் முதல் சுற்று போட்டியில் ஜன்னிக் சின்னெர் வெற்றி பெற்றுள்ளார்.

“கிராண்ட்ஸ்லாம்“ அந்தஸ்து கொண்ட பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் நம்பர் 1 வீரரான இத்தாலியின் ஜன்னிக் சின்னெர், பிரான்ஸ் வீரர் ஆர்தர் ரிண்டர்க்னெக் உடன் மோதினார்.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சின்னெர் 6-4, 6-3 மற்றும் 7-5 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

## அல்காரஸ் அசத்தல் ஆட்டம்

பாரிஸ், மே 28

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் கார்லஸ் அல்காரஸ் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

“கிராண்ட்ஸ்லாம்“ போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ், இத்தாலியின் கியுலியோ செப்பியேரி உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கார்லஸ் அல்காரஸ் 6-3, 6-4, 6-2 என்ற செற் கணக்கில் கியுலியோ செப்பியேரியை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)




## புதிய வரலாறு படைத்த சூர்யகுமார் யாதவ்

ஜெய்ப்பூர், மே 28

ரி- 20 கிரிக்கெட் போட்டியில் சூர்யகுமார் யாதவ் புதிய வரலாறு படைத்துள்ளார்.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இந்தியாவின் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் அரங்கேறிய 69ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் சூர்யகுமார் யாதவ் 57 ஓட்டங்கள் அடித்தார்.

நடப்பு சீசனில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் சூர்யகுமார் யாதவ் களமிறங்கிய 14 ஆட்டங்களிலும் குறைந்தது 25 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன் மூலம் ரி- 20 கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ந்து அதிக முறை 25 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இதற்கு முன்பு தென்னாபிரிக்காவின் தெம்பா பௌமா தொடர்ந்து 13 ஆட்டங்களில் 25 ஓட்டங்கள் எடுத்ததே




சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள சூர்யகுமார் யாதவ் புதிய வரலாறு படைத்துள்ளார். (எ)

## சுனில் நரைன் சாதனை

புதுடில்லி, மே 28

சுனில் நரைன் இதுவரை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக 210 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் டில்லியில் உள்ள அருண்ஜெட்லி மைதானத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற 68ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இதில் கொல்கத்தா தரப்பில் சுனில் நரைன் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையும் சேர்த்து சுனில் நரைன் இதுவரை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக 210 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் ரி -20 கிரிக்கெட் வரலாற்றில் ஓர் அணிக்காக அதிக விக்கெட்கள் கைப்பற்றிய பந்துவீச்சாளர் என்ற உலக சாதனையை அவர் படைத்துள்ளார். (எ)

## மோசமான சாதனையில் முதலிடத்தில் ரஷித் கான்

அகமதாபாத், மே 27

மோசமான சாதனையில் முகமது சிராஜ் உடன் முதலிடத்தில் இணைந்தார் ரஷித் கான்.

ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற 67ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நடப்பு தொடரில் குஜராத் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ரஷித் கான் மோசமான நிலையில் தவித்து வருகிறார். இந்த சீசனில் மட்டும் அவரது பந்துவீச்சில் இதுவரை 31 சிக்ஸர்கள் அடிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் ஒரு சீசனில் அதிக சிக்ஸர்கள் வழங்கிய பந்துவீச்சாளர் என்ற மோசமான சாதனையில் முகமது சிராஜ் உடன் முதலிடத்தை பகிர்ந்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. முகமது சிராஜ் - ரஷித் கான் - 31 சிக்ஸர்கள்,
2. ஹசரங்க - சாஹல் - 30 சிக்ஸர்கள்
3. பிராவோ - 29 சிக்ஸர்கள் (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலை காப்பு சட்ட திருத்தம் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்படும்!

கொழும்பு, மே 28

நிகழ்நிலை காப்பு சட்டம் என்பது காலத்தின் தேவையாகும். அதில், ஏற்கனவே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், இந்த சட்டத்தில் மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் விசேட குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதே எமது எதிர்பார்ப்பாகும். தற்போதிருப்பது முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம் அல்ல. சுமார் 38 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு அவற்றை உள்ளடக்கிய சட்ட மூலமே தற்போது காணப்படுகிறது.

அவற்றிலும் மேலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்காக போதுமானளவு கால அவகாசமும் அரசாங்கத்தால் வழங்கப்படும். திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளின் போது ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நிகழ்நிலை பாவனையாளர்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, திருத்தப்பட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இந்த சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் அரசாங்கத்தின் தேவை என்பதற்கு அப்பால், பொது மக்களின் தேவை என்பதே முக்கியத்துவமானது.

சமூக வலைத்தளங்களால் பாதிக்கப்படுவோர், தனிப்பட்ட நபர்கள் மீது அவதூறு பரப்புதல் என பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த பிரச்சினைகளுக்கான தீர்வாக நிகழ்நிலை காப்பு சட்டம் அமையும் என்றார்.

அமைச்சரவையால் கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி 2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த அமைச்சரவை குறிப்பு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது இனங்காணப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் இனங்காணப்படும் திருத்தங்களை உள்ளடக்கி மேற்குறித்த சட்டத்தை திருத்தம் செய்வதற்கான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் தொடர்புடைய அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

(ஐ)

## தமிழ்...

வெளியிலும் ஒற்றுமையுடன் குரல் கொடுத்ததன் விளைவாகவே குறித்த சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் மீளப் பெற்றிருக்கிறது.

இது தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு கிடைத்திருக்கின்ற மிகப்பெரிய வெற்றியாகும். தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த மக்கள் எதிர்காலத்திலும் தங்களுடைய உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக இவ்வாறு ஒன்றாக செயல்படவேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 40முன்னாள்...

பட்டியலில் உள்ளவர்களுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிவுறுத்தல்களை பெறுவதற்காக அந்த ஆணைக்குழு வின் பணிப்பாளர் அடிக்கடி ஜனாதிபதி செயலகத்துக்கு செல்கிறார்.

"அந்த, கைது பட்டியலில் எனது பெயர் உள்ளது. அத்துடன், காஞ்சன விஜயசேகர, ரமேஷ் பத்திரண ஆகியோரின் பெயர்களும் உள்ளன. மகிந்தானந்த அளுத்கம கேயும் இவ்வாறே கைது செய்யப்பட்டார். முன்னர் அமைச்சு பதவிகளை வகித்தவர்களின் கீழ் வரும் திணைக்களங்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர் பிலேயே விசாரணைகள் நடைபெறுகின்றன. ஆனால், அதற்காக முன்னாள் அமைச்சர்களை கைது செய்கின்ற னர்.

"உள்ளூராட்சி சபைகள் தேர்தலின் பின்னரே, எனது பெயரை கைது பட்டியலில் சேர்த்தனர். ஊழல்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளை கைது செய்யாததாலேயே தமது வாக்கு வங்கி குறைவடைந்ததாக அரசாங்கம் கருதுகிறது", இவ்வாறு தென்னிலங்கையின் ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

## வர்த்தமானியை...

அரசாங்கத்துக்கு மிகப்பெரிய அழுத்தத்தை பிரயோகிக்க நடவடிக்கை களை மேற்கொண்டிருந்தோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் சி. சிறீதரன் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கும் அர்ச்சுனாவுக்கும் நன்றி.

"நாங்கள் தமிழ்த் தேசிய பேரவையாக கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரங்களுக்கு சென்று இந்த விடயம் தொடர்பில் வர்தமானியை வாபஸ் பெற வைக்கவேண்டும் என்று கூறியிருந்தோம். அவர்களும் எமக்கு வாக்குறுதி அளித்திருந்தார்கள், நாங்கள் இவற்றைக் கலந்துரையாடுவோம் என்று அவர்களும் இதனை செய்திருக்காவிட்டால் இதனை செய்திருக்க முடியாது. எனவே, அவர்களுக்கும் எமது நன்றிகள். இந்த அரசாங்கம் எங்கள் கருத்துகளை கேட்டு இவற்றைச் செய்யும் என்றால் இனப்பிரச்னையே இருக்காது.

"பிரதமருடனான சந்திப்பில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நிஸாம் காரியப்பர், அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"காணி சுவீகரிப்பு வர்த்தமானிக்கு எதிராக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதை தமிழ், முஸ்லிம் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்", என்றார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், க. அருந்தவபாலன் ஆகியோரும் உடனிருந்தனர். (ஐ)

## சத்திர...

ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 23ஆம் திகதி அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சத்திர சிகிச்சையின் பின்னர் சில மணிநேரங்களில் அந்தப் பெண் மயக்கமடைந்தார். இதையடுத்து, கடந்த 25ஆம் திகதி அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-05)

## வர்த்தமானி...

தீர்மானித்திருப்பதாக அமைச்சரவை முடிவாக ஓர் அறிவிப்பு வெளிவந்துள்ளது. இந்த வர்த்தமானி பிரசுரம் மார்ச் இறுதியிலே செய்யப்பட்டாலும் பல நாள்களுக்குப் பின்புதான் அரச பிரசுரிப்பு மூலமாக தெரியவந்தது.

இது தொடர்பில் கடந்த மே 3ஆம் திகதி ஜனாதிபதிக்கு நான் ஒரு கடிதத்தை எழுதினேன். அதில், அந்த வர்த்தமானியை மீளப்பெறவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். முன்னதாக பல கூட்டங்களிலே பகிரங்கமாக மே மாதம் 28 ஆம் திகதி வரையில் நாம் காலக்கெடு கொடுக்கிறோம், அதற்கு முன்பாக இந்த வர்த்தமானி மீளக் கை வாங்கப்பட வேண்டும், இல்லையேல் மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்றுநடத்தப்படும் என்றும் நான் எச்சரிக்கை செய்திருந்தேன்.

இன்று (நேற்று) காலையில்கூட ஜனாதிபதிக்கு நானும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானமும் ஒப்பமிட்டு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தோம். நான் முதலிலே அனுப்பிய கடிதத்தில் இல்லாத விடயங்களையும் சுட்டிக்காட்டி, உடனடியாக இந்த வர்த்தமானி மீளக் கைவாங்கப்பட வேண்டும் இல்லையென்றால் வெகுஜன போராட்டங்களிலும், சட்ட மறுப்புப் போராட்டங்களிலும் எங்களது மக்களை வழி நடத்த வேண்டியதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

சட்ட மறுப்பு போராட்டங்களுக்கான ஆயத்தங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. மே 28 ஆம் திகதி கடந்தவுடன் 29 ஆம் திகதி பெருமளவிலான சட்ட போராட்டங்கள், பகிஷ்கரிப்புகள், மக்களின் எதிர்ப்பு போராட்டங்களை நடத்தத் தயார்படுத்திக்கொண்டிருந்த வேளையிலேதான் அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. வர்த்தமானி அறிவித்தல் கை வாங்கலை விசேடமாக வரவேற்கிறோம். இதற்காக ஜனாதிபதிக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்." - என்றார். (ஐ)

# முகத்துக்கு பூசும் கிறீம்களில் ஆபத்தான கனஉலோகங்கள்

## தவிர்க்குமாறு எச்சரிக்கை

கொழும்பு, மே 28

நாட்டில் கிடைக்கும் முகத்துக்கு பூசும் கிறீம்கள் மற்றும் லோஷன்களில் ஆபத்தான அளவில் கனஉலோகங்கள் இருப்பது ஆய்வக சோதனைகளில் தெரியவந்துள்ளது. எனவே, அவற்றைத் தவிர்க்குமாறு நுகர்வோர் அதிகார சபை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சோதனை செய்யப்பட்ட தயாரிப்புகள் கனஉலோகங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்பு களை மீறுவனவாக உள்ளன. இதனால், அதனை பயன்படுத்துவோர் கடுமையான உடல் நல ஆபத்துகளை எதிர் கொள்வர். எனவே, 49 வகையான கிறீம்கள், லோஷன்களை தவிர்க்குமாறும் நுகர்வோர் அதிகார சபை எச்சரித்துள்ளது.

(ஐ)

# 10 இலட்சத்தை கடந்தது சுற்றுலாவிகளின் வருகை!

கொழும்பு, மே 28

நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கம் முதல் மே 25ஆம் திகதி வரையிலேயே 10 இலட்சம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். அங்கிருந்து, ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 129 பேர் நாட்டுக்கு வந்துள்ளனர். ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 43 பேரும் இங்கிலாந்திலிருந்து 94 ஆயிரத்து 714 பேரும் ஜேர்மனியிலிருந்து 67 ஆயிரத்து 998 பேரும் பிரான்ஸிலிருந்து 56 ஆயிரத்து 302 பேரும், சீனாவிலிருந்து 55 ஆயிரத்து 319 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத சாத்தியங்களை திறந்து விடுதல், வர்த்தகம் சார்ந்த சவால்களுக்கு முகங்கொடுத்தல் மற்றும் இலங்கை, சீனா இடையிலான வர்த்தக வீச்செல் லையை அதிகரித்தல் மற்றும் தரத்தை மேம்படுத்துதலை குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட டது.

இதேவேளை, கைத்தொழில், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மக்கள் சீன வாணிப அமைச்சு ஆகியவை இடையே கைத்தொழில் வழங்கல் சங்கிலிகளின் பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்துதல் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## போதைக்கு...

இதைத் தொடர்ந்து, அந்தப் பெண் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது, அந்தப் பெண்ணை 6 மாதங்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## எமது...

கேள்வியெழுப்பினர். அவர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர்,

"மாகாண சபை தேர்தல் நடந்தால் நாம் போட்டியிடுவோம். வடக்கு முதலமைச்சர் வேட்பாளர்கள் என்று இப்போது அடிபடும் பெயர்களை பார்த்தால், நாம் ஒரு தும்புத்தடியை நிறுத்தலாம் என்று நினைக்கிறோம்" - என்று கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# முதுகெலும்புள்ள தீர்மானமொன்றை மின்சார கட்டண விடயத்தில் எடுங்கள்

## அரசிடம் கோருகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மே. 28

**மின் கட்டண விடயத்தில் அரசாங்கம் முதுகெலும்புள்ள தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார். எதிர்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின் கட்டண அதிகரிப்பு பற்றிய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. மின் கட்டண அதிகரிப்பு ஏற்பட்டால் தொழிற்சாலைகள் உட்டபட நிறுவனங்கள் பலவற்றை மூட நேரிடும். அது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை. சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தியை மேற்கொள்ள எந்தத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. மாறாக மக்கள் மீது சுமையை சுமத்தும் வகையிலான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன.

ஆகவே இந்த விடயம் தொடர்பில் ஆராயந்து முதுகெலும்புள்ள தீர்மானமொன்றை எடுக்குமாறு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். முழு அரச சேவையும் செயலிழந்துள்ளது. அனைத்து அமைச்சுக்கு முன்பாகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோன்று தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளன.-என்றார். (அ)



# "உறங்காத கொழும்பு" திட்டத்திற்கு அனுமதி

கொழும்பு, மே. 28

இரவுப் பொழுதில் உல்லாச செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு பொருளாதாரத்தை அதிகரித்தல், சுற் றுலாத்துறையை மேம்படுத்தல் மற்றும் கொழும்பு நகரில் அனு பவிக்கக்கூடிய உல்லாச அனுபவங்களை அதிகரிப்பதற்கும் கட்டமைப்பு ரீதியான அணுக லுக்கான தேவை கண்டறியப் பட்டுள்ளது.

அதற்கமைய, "கடலோர இரவுப் பொழுது : உறங்காத கொழும்பு" தொனிப்பொரு ளின் கீழ் கொள்ளுப்பிட்டி ரயில் நிலையத்திலிருந்து தெஹிவளை வரைக்குமான 7.4 கிலோமீற்றர் தூரம் கொண்ட கொழும்பு கடலோர வீதியை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதில் காலி முகத்திடல் தொடக்கம் புனித தோமஸ் ஆரம்ப பாடசாலை வரைக் கும் 400 மீற்றர் வலயத்தில் அதிக கவனம் செலுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, உத்தேச கருத் திட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்காக வெளி விவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# "வேலைநிறுத்தம் செய்வோரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்!"

கொழும்பு, மே. 28

சுகாதார தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்தப் போராட்டத்தால் வைத்தியசாலை கடமைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் ருக்சான் பெல்லன தெரிவித்துள்ளார்.

வேலைநிறுத்தப்போராட்டம் தொடர்பில் ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நாளாந்த செயல்பாடுகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. வழமைபோலவே செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 72 தொழிற்சங்கங்களை கொண்டுள்ளதாகக் கூறப்படும் தரப்பினரே இந்த போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். ஆனால், அதில் இரண்டு தொழிற்சங்கங்களே தற்போதுபோராட்டத்தை முன்னெடுக்கின்றன.

கோரிக்கைகள் தொடர்பில் போராட்டம் நடத்த அவர்களுக்கு உரிமையுண்டு. எனினும் நோயாளர்களை பாதிக்கும் வகையில் போராட்டங்களை முன்னெடுக்க சட்டத்தில் இடமில்லை - என்றார். (அ)

# சஜித் டிசெம்பரில் ஜனாதிபதி என்பது வெறும் கனவு மட்டுமே!

## கூறுகிறார் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, மே. 28

" ஒரு கட்சியின் வளர்ச்சியில் தொகுதி அமைப்பாளர்கள் பிரதான பங்குவகிக்கின்றார்கள். அவர்களே மக்களுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கின்றார்கள். இன்று அவர்களே பதவி விலகும் நிலையில் எதிர்வரும் டிசெம்பரில் குறுக்கு வழியில் ஜனாதிபதியாகப் பதவியேற்கக் கனவு காண்கின்றார் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ."

-இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தோற்றம் பெற்று இதுவரை எந்தவொரு தேர்தலிலும் வெற்றியடையவில்லை. அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகிக்கத் தகுதி இல்லாத அவர், ஜனாதிபதியாக வருவதற்கு முயற்சிக்கின்றமை வேடிக்கையானது. தேசிய மக்கள் சக்தி அரசை விமர்சிக்கின்றமைதான் சஜித் பிரேமதாஸவின் நாளாந்த வேலையாக இருக்கின்றது.

எமது கட்சியில் குறைகளைக் கண்டு பிடிப்பதே நிறுத்திவிட்டு தமது கட்சி யில் இருக்கும் ஓட்டைகளை அடைப்பதற்கு அவர் முயற்சிக்க வேண்டும்-என்றார். (அ)

# முதியவர் சடலமாக மீட்பு

மன்னார், மே. 28

மன்னார் பெரியபாண்டிவிரிச்சான் பகுதியில் நேற்று முன் தினம் வயலுக்குச் சென்று காணாமல்போன முதியவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்து பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் உள்ள வயலுக்கு சென்ற முதியவரை காணவில்லை என உறவினர்கள் தேடியவேளை வயலுக்குச் செல்லும் வீதியில் குறித்த முதியவர் சடலமாக அடையாளம் காணப்பட்டார்.

பெரியபாண்டிவிருச்சான் பகுதியை சேர்ந்த 59 வயதான எல்லப்பன் இராதாகிருஸ்னன் என்பவர் இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.இந்த நிலையில், மடு பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

# ரயில் போக்குவரத்து பாதிக்கப்படக்கூடும்!

கொழும்பு, மே. 28

புதிதாக ரயில் சாரதிகளை சேவையில் இணைத்துக் கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் ரயில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என் புகையிரத இயந்திர சாரதிகள் சங்கத்தின் பிரதான செயலாளர் சந்தன வியந்துவ தெரிவித்தார்.

ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரயில் சாரதிகள் போராட்டத்தில் ஈடுபடவில்லை.சிலர் விடுமுறை பெற்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரயில் சாரதிகள் சுகவீன விடுமுறை பெற்று சென்றதன் காரணமாக பல ரயில் சேவைகள் ரத்தாகியிருந்தன.

உரிய வகையில் ரயில் சேவையினை முன்னெடுக்க வேண்டுமானால் 458 ரயில் சாரதிகள் சேவைக்கு அமர்த்தப்பட வேண்டும்.அவர்களில் 220 பேர் மாத்திரமே சேவைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

எனவே, ரயில் சாரதி ஒருவர் நாளாந்தம் இரண்டு ரயில் சேவையை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.இறுதியாக 2017 ஆம் ஆண்டளவிலயே ரயில் சாரதிகள் சேவைக்காக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அதற்கு பிறகு இதுவரை ரயில் சாரதிகளுக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை.இந்த நிலை தொடரும் பட்சத்தில் எதிர்காலத்தில் ரயில் போக்குவரத்திற்கு கடும் பாதிப்பு ஏற்படும்.உடன் ஆட்சேர்ப்பு மேற்கொண்டாலும் அவர்களை பணிகளில் ஈடுபடுத்த 3 வருடங்கள் எடுக்கும்-என்றார். (அ)

# பாதுகாப்பு கோரும் எம்.பிகளின் கோரிக்கை தேசிய பாதுகாப்பு சபையின் பரிசீலனைக்கு!

கொழும்பு, மே. 28

தமக்குப் பாதுகாப்புத் தேவை எனக் கோரும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை தேசிய பாதுகாப்பு சபையின் பரிசீலனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார். பாதுகாப்பு தொடர்பான இறுதி மதிப்பீடு அறிக்கை தற்பொழுது கிடைத்துள்ள உறுப்பினர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பதில் பொலிஸமா அதிபர் மேலும் தெரிவித்தார்.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் பங்குபற்றலில் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பதில் பொலிஸமா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் எதிர்த்தரப்பு கட்சித் தலைவர்கள் சிலர் சபாநாயகரைச் சந்தித்து தமது பாதுகாப்புத் தொடர்பான சிக்கலைகளை முன்வைப்பதற்கு கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைய, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபாலவுடன் சபாநாயகர் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதற்கமைய, இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளின் முன்னேற்றத்தை தனக்கு அறிவிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தினார்.

நாட்டில் காணப்படும் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் அறிவுறுத்திய பொலிஸ்மா அதிபர், அண்மைக் காலமாக இடம்பெற்ற பல மனிதப்படுகொலைகள் குற்றக் கும்பல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கிடையில் இடம்பெறும் மோதல்களின் விளைவுகள் எனவும், அந்தக் குற்றச் செயல்களுக்கு பிரதேச அரசியல்வாதிகளின் தொடர்புள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டினார்.

இங்கு எதிர்த்தரப்பு கட்சித் தலைவர்களினால் தமது தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை பெறுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள தேவை தொடர்பில் விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கருத்துத் தெரிவிக்கையில், தனக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு வசதிகள் இல்லையெனில், தனக்கான பாதுகாப்பை செய்து கொள்வதற்கு துப்பாக்கி வழங்குமாறு முன்மொழிந்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உயர்ந்த ஜனநாயகப் பண்புகளைக் கொண்ட நாடொன்றில் பாதுகாப்புக்காக துப்பாக்கிகள் வழங்கப்படக்கூடாது எனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் ஒவ்வொரு நபர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# இராஜகிரிய கடை ஒன்றில் தீ!

கொழும்பு, மே. 28

கொழும்பு - இராஜகிரிய பகுதியில் உள்ள கடை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து நேற்று ஏற்பட்டது.கோட்டை மாநகர சபையின் தீயணைப்பு படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீயை கட்டுப்படுத்த 4 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.இந்த தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org